6 பாடம்

# பொன்னிலும் மேலானது

***‘‘அம்மா இன்றைக்குப் பள்ளியில் நான் விளையாடிய புதிய விளையாட்டுப் பொருள் எனக்கு வேண்டும்’’ என்றாள் ஈவ்லின். அம்மா அவளிடம், ‘‘இப்போது அதை வாங்க முடியாததற்காக வருந்தாதே; நாம் ஒருவருக்காக ஒருவர் படைக்கப்பட்டிருப்பதால் தேவனுக்கு நன்றியுடன் இருக்கவேண்டும்’’ என்று கூறினார். பிச்சைக்காரர் ஒருவர் பெற்ற மகிழ்ச்சியை இப்போது பார்ப்போமா?***

ஜெபவேளையாகிய ஒன்பதாம் மணிவேளையில் பேதுருவும் யோவானும் ஆலயம் சென்றார்கள். அலங்காரவாசல் எனப்பட்ட தேவாலய வாசலண்டையில் அவர்கள் வந்தார்கள். அப்போது ஒரு பிச்சைக் காரனைக் கண்டார்கள். அவனைக் கண்டு புன்னகைத் தார்கள். அவன்



பிறந்ததிலிருந்தே கால் நடக்க முடியாதவன். தேவனைத் தொழவருபவர்கள் அவனுக்குப் பணம் கொடுப்பார்கள்’’ என நம்பியே அவனது நல்ல நண்பர்கள் தினமும் அந்தப் பிச்சைக் காரனை அலங்கார வாசலண்டையிலே சுமந்து கொண்டு வைப்பார்கள்.

ஆலயத்திற்குள் நுழையப் போன பேதுரு, யோவான் ஆகிய இருவரையும் கண்டு அவன் பிச்சை கேட்டான். அன்போடு தன்னைக் கண்டு புன்னகைத்த அவ்விருவரும் தனக்கு நிச்சயம் ஏதாகிலும் தருவார்கள் என நம்பினான்.

திடீரென பேதுருவும் யோவானும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டார்கள்.

அப்பிச்சைக்காரனை உற்றுப்பார்த்தார்கள். ‘‘எங்களை நோக்கிப்பார்’’ என்று அவனிடம் கூறினார்கள். ஏதோ தனக்குத் தரப்போகிறார்கள் என்று மிகுந்த ஆவலுடன் அவர்களை அவன் நோக்கிப்பார்த்தான்.

அப்போது பேதுரு, ‘‘வெள்ளியும் பொன்னும்

## மனன வசனம்

**இயேசுவைக் காண விரும்புகிறோம்.**

**யோவான் 12:21.**

என்னிடத்தில் இல்லை; என்னிடத்தில் உள்ளதை உனக்குத் தருகிறேன்; இயேசுவின் நாமத்தினாலே நீ எழுந்து நட'' என்று சொல்லி அவனது கையைப் பிடித்துத் தூக்கிவிட்டார். உடனே அவனுக்குள் பெலன் வந்தது. குதித்து எழுந்து நின்று நடந்து தேவனைத் துதித்தான்.

அளவற்ற மகிழ்ச்சியோடு அவர்களுடன் அவனும் ஆலயத்தினுள் சென்றான். அவன் நடப்பதையும் தேவனைத் துதிப்பதையும் கண்ட மக்கள் கூட்டமாக ஓடி வந்தார்கள். சாலொமோன் மண்டபத்தில் பேதுரு, யோவானுடன் நின்று கொண்டிருந்த அவனை மிகவும் ஆச்சரியமாய்ப் பார்த்தார்கள்.

இயேசுவைப் பற்றிக்கூற இதுவே நல்ல தருணம் இந்த வாய்ப்பை நழுவ விட்டு விடக்கூடாது என்று பேதுரு தீர்மானித்தார்.

எனவே இஸ்ரவேலரே நீங்கள் இப்படிப் பிரமித்து ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் பெலத்தால் இவனை நடக்கப் பண்ணவில்லை. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு எனும் நம் முற்பிதாக்களின் தேவன் தம் பிள்ளையாகிய இயேசுவை மகிமைப்படுத்தினார். ஆனால், நீங்களோ மரணத்துக்கு அவரை ஒப்புவித்தீர்கள்.

பரிசுத்தமும் நீதியுமுள்ள தேவனை நீங்கள் மறுதலித்து ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள். தேவனோ இரட்சகர் இயேசுவை உயிரோடெழுப்பினார். அந்த இயேசுவின் நாமத்தினால்தான் இந்த மனிதன் சுகம் பெற்றிருக்கிறான். நீங்கள் அறியாமையால் தேவன் இயேசுவைக் கொலை செய்தீர்கள். ஆனாலும் நீங்கள்



## செய்தி

**பிறருக்கு உதவிசெய்யும்போது, நான் அவர்களுக்கு இயேசுவைக் காட்டுகிறேன்.**

மனந்திரும்பினால் அவர் நிச்சயம் மன்னிப்பார். வரவேண்டுமென்று நீங்கள் எதிர்பார்த்திருக்கிற மேசியா இந்த இயேசுதான். நம் முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும் முன்னுரைத்த மகத்துவம் பொருந்திய மேசியா இந்த இயேசுதான், என்று ஆணித்தரமாகவும் அருமையாகவும் பேசினார். இரவு வரையிலும் பேசிக்கொண்டே இருந்தார். கூட்டம் கூட்டமாக மக்கள் வந்து வார்த்தைகளைக் கேட்டு இயேசுவை விசுவாசித்தார்கள். அன்றையதினமே ஏறக்குறைய 5,000 பேர் தேவ வசனத்தை விசுவாசித்து ஏற்றுக்கொண்டார்கள். தேவனது பிள்ளைகளானார்கள்: பேதுருவையும் யோவானையும் பயன்படுத்தி அந்த மனிதனுக்கு இயேசு சுகம் அளித்ததால் அநேகர் இயேசுவை விசுவாசித்தனர். என் கண்ணே! நீ இயேசுவை விசுவாசிக்கிறாயா?

**புதிர் 6**

**செய்முறை:**

*இவ்வார மனன வசனம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. வலப்பக்கமிருந்து இடப்பக்கமாக வாசித்து, வார்த்தைகளைக் கண்டுபிடித்து, கோட்டில் எழுது.*

**.ம்றோகிபும்ருவி**

**ணகா க்வைசுயேஇ**

________________________________________